23.09.2025

OS No: 68/2013

வா.சா. 2 திரு. காசி த/பெ. ராமையா

**1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாம்பவிகா மேல்நிலைபள்ளிக்கூடமானது முதலில் 1999-2000 ஆண்டு ஆரம்பிக்கும் போது +1, +2 வகுப்புகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். 2000-2001 ம் ஆண்டில் 6 முதல் 10 வகுப்புகளும், 2001-2002ம் ஆண்டில் 1 முதல் 5ம் வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி பள்ளியின் வளர்ச்சியானது அதில் பணிபுரியும் பணியாளர்களின் கூட்டு முயற்சியால்தான் என்றால் சரிதான். எனது மகன் மாறன் மேற்படி பள்ளியில் மாத சம்பளம் பெறக்கூடிய ஒரு உதவி ஆசிரியர் என்றால் சரிதான். எனது தரப்பில் மேற்படி சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர்களின் கூட்டம் நான் பணி புரிந்த 2000 ஆண்டு முதல் 2012ம் ஆண்டு வரையில் 2 மாதத்திற்கு ஒரு முறை கூட்டம் கூட்டப்பட்டது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பள்ளியில் தான் உள்ளது. மேற்படி ஆவணம் பள்ளியில் உள்ளது என்ற சங்கதியை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. மேற்படி சங்கதி குறித்து எனது பிராதிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லிடாமல் பின் யோசனையின் பெயரில் மேற்படி ஆவணம் பள்ளியில் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி நான் பணியில் இருந்த காலகட்டத்தில் மேற்படி பள்ளிக்கூடத்திற்கு அரசிடம் அனுமதி பெறப்பட்டதா என்றால் 3 வருடத்திற்கு ஒரு முறை அனுமதி பெறப்பட்டிருந்தது. 2011 ம் வருடத்தில் அனுமதியை புதுப்பிக்கும் போது பள்ளிக்கூடத்திற்கு மேலாக உயர்அலுத்த மின் கம்பிகள் செல்வதை பள்ளிக்கு வெளியே மாற்ற வேண்டும் அப்போது தான் அனுமதி புதுப்பிக்கப்படும் என தெரிவிக்கப்ட்டது அந்த காலகட்டத்தில் எனது மகன் மாறன் இறந்து விட்டார் பள்ளியின் கட்டுப்பாடு எனது மருமகன் வசம் சென்று விட்டதால் அவர்கள் புதுப்பித்தார்களா என்று எனக்கு தெரியாது. தாவா வழக்கில் நான் குறிப்பிடும் 3 வருடத்திற்கு ஒரு முறை பள்ளி

புதுப்பித்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பள்ளியில் செயலாளராக இருந்த போது 4, 5 பிரதிவாதிகள் கணக்கு வழக்கு கேட்டு அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் நியாபகம் இல்லை. வா.சா.ஆ.3ஐ யார் யாருக்காக அனுப்பினார்கள் என்றால் 4, 5 பிரதிவாதிகள் எனக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பிற்கு அவர்களுக்கு நான் அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகும். 4, 5 பிரதிவாதிகள் எனக்கு சாம்பவிகா கல்வி அறக்கட்டளை கூட்டத்தை முறையாக கூட்ட வேண்டும் என்றும், கணக்கு வழக்குகளை முறையாக ஒப்படைக்க வேண்டும் என்றும் கோரி அறிவிப்பு எனக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.3ல் சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கான வரவு செலவு குறித்த ஆவணங்கள் பள்ளியில் தான் உள்ளது என குறிப்பிள்டுள்ளேனா என்றால் நியாபகம் இல்லை. மேற்படி கணக்கு வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் என் வசம் இருந்தது என்றும் அதனால் தான் மேற்படி ஆவணங்கள் பள்ளியில் இருந்ததாக வா.சா.ஆ.3ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 2000ம் வருடம் முதல் 2012 வரை வருமான அலுவலகத்திற்கு சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் பெயரிலான வரவு செலவு குறித்து கணக்கு காட்டப்பட்டதா என்றால் நியாபகம் இல்லை. மேற்கண்ட காலத்திற்குரி வருமான வரி சம்மந்தமான எந்த ஒரு ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2000 வரும் முதல் 2012ம் வருடம் வரையிலான வருவாயின் லாபத்தை நானும் எனது மகன் மாறனும் எடுத்துக்கொண்டோம் என்றும் அதனால் தான் வருமான வரி துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2000 வருடம் முதல் 2012ம் வருடம் வரையிலான காலத்தில் சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கான பள்ளிக்கூடத்தின் ஒவ்வொரு மாணவனின் ஒவ்வோரு வருட பள்ளி கட்டணத்தை நான் தான் நிர்ணயம் செய்தேன் என்றால் சரிதான். நீதியரசன் ரவிராஜபாண்டியன் அவர்களின் ஆணையர் அறிக்கையின் படி ஒவ்வொரு தனியார் பள்ளியும் மாணவர்களின் கல்வி கட்டணம் குறித்து நிர்ணயம் செய்ய சங்கதி

சொல்லப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கை எந்த வருடம் செய்யப்பட்டது என்றால் 2009ம் வருடத்தில் செய்யப்பட்டது. மேற்படி ஆணையர் அறிக்கைக்கு முரனாக 2009க்கு பிறகு கல்வி கட்டணம் வசூளித்தால் அது சம்மந்தப்பட்ட புகார் அரசிடம் தெரிவிக்கலாம் என வழிவகை இருந்தது என்றால் சரிதான். 2009ம் வருடத்தில் இருந்து தற்போது வரை கூடுதல் கட்டணம் வசூளிப்பதாக புகார் எதுவும் செய்யப்படவில்லை என்றால் 2009 ம் வருடத்தில் இருந்து 2012ம் வருடம் நான் செயலாளர் பதவியில் இருந்து விலகும் வரை புகார் எதுவும் இல்லை அதன் பிறகு புகார் செய்யப்பட்டுள்ளது. எந்த தேதியில் யார் புகார் கொடுத்தது என்றால் 30.10.2012 ம் தேதி மாணவரின் பெற்றோர் என்னிடமும், CEO அலுவலகத்திலும் புகார் கொடுத்தார்கள், நீதிமன்றத்திற்கும் சென்றார்கள். மேற்படி நீதிமன்றத்திற்கு சென்றதாக நான் குறிப்பிடுவது கருப்பையா என்பவர் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ரிட் மனுவை சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சிவகங்கை மாவட்ட CEO அவர்கள் கூடுதல் கட்டணம் எதுவும் வசூளிக்கப்பட்வில்லை என அறிக்கை தாக்கல் செய்ததின் பெயரில் மேற்படி ரிட் மனு முடிக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி விவரம் எனக்கு தெரிந்திருந்தும் ரிட் மனுவை கருப்பையாவை தாக்கல் செய்ய சொன்னது நான் தான் என்பதால் தற்போது தெரியாது என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 20.05.2012 ம் தேதி நான் கூட்டிய அறக்கட்டளை கூட்டத்தில் 4ம் பிரதிவாதி அறக்கட்டளையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் அப்படி ஒரு கூட்டமே கூட்டப்படவில்லை. மேற்படி 2012-2013ம் வருட மாணவர் சேர்க்கையானது நான் எனது மகன் மாறன் மற்றும் 4ம் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து மாவட்ட காவல் துறை துணை கண்காணிப்பாளர் சொன்னதின் அடிப்படையில் மேற்கொண்டோம் என்றால் சரிதான். 2012-2013ம் வருட மாணவர் சேர்க்கைக்கான கல்வி கட்டணத்தை நான் தான் வசூல் செய்தேன் என்றால் சரிதான். எனது மகன் மாறனின் மருத்துவ சிகிச்சைக்காக எத்தனை நாட்கள்

சென்னையில் இருந்தேன் என்றால் 1 வாரம் இருந்தேன். 2012ம் வருடத்திற்கு பின்பு, மாணவர்களோ அல்லது பெற்றோரோ கூடுதல் கட்டணம் வசூளிப்பதாக சொல்லி கொடுத்ததகா சொல்லும் புகார் மனு எதையும் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2012ம் வருடத்திற்கு பிறகு இன்றைய தேதி வரை சாம்பவிகா கல்வி அறக்கட்டளை சம்மந்தப்பட்ட வருமான வரி கணக்குகள் முறையாக வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் செயளாலராக பணி புரிந்த காலத்தில் பள்ளியின் அங்கீகாரத்தை முறையாக புதுப்பிக்கவில்லை என்பதால் தான் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2012க்கு பிறகு பள்ளியின் அங்கீகாரம் முறையாக புதுப்பிக்கப்பட்டு வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அறக்கட்டளையின் கூட்டம் கூட்டினால் மட்டுமே அது பற்றி தெரிய வரும். அறக்கட்டளையில் முறையாக கூட்டம்கூட்ட வேண்டும் என்பதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு எத்தனை முறை அனுப்பியுள்ளேன் என்றால் 2015 ம் வருடம் அனுப்பினேன் அதன் பிறகு வழக்கு போட்டுள்ளேன். அறக்கட்டளையின் கூட்டம் முறையாக கூட்டப்படவில்லை என்று யாருக்கேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் காவல் துறைக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் மற்றும் கல்வி துறைக்கும் புகார் கொடுத்துள்ளேன். 2, 3 முறை புகார் கொடுத்துள்ளேன். புகார் கொடுத்ததாக நான் சொல்வது குறித்து காட்டிட ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2012க்கு பிறகு சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் கூட்டமானது 2 நாட்களுக்கு ஒரு முறை முறையாக கூட்டப்படுகிறது என்றும் அதனால் தான் நான் புகார் எதுவும் செய்திட வில்லை அதனால் தான் மேற்படி புகாருக்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2012ம் வருடத்திற்கு பிறகு தற்போதைய தேதி வரை சாம்பவிகா பள்ளியில் மாவணர்களிடம் கூடுதல் கட்டணம் எதுவும் வசூல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 2012 வருடத்திற்கு பிறகு

தற்போதைய தேதி வரை சாம்பவிகா பள்ளிக்கோ, அறக்கட்ளைக்கோ நான் செல்லவில்லை என்றால் அறக்கட்டளையின் கூட்டம் கூட்டப்படவில்லை அதனால் நான் செல்லவில்லை. மேற்படி அறக்கட்டளையின் கூட்டமானது சாம்பவிகா மேல்நிலைபள்ளியில் தான் நடைபெறும் என்றால் சரிதான். மேறப்டி அறக்கட்டளையின் கூட்டம் முறையாக நடைபெறுகிறது என்றும் நான் தான் அந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. 2ம் வாதி பாலமுருகன் எந்த வருடம் அரசு பணியில் சேர்ந்தார் என்றால் 2003ம் வருடம் சேர்ந்தார். அரசு பணியில் 2ம் வாதி சேர்ந்ததால் அறக்கட்டளை உறுப்பினராக தொடர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் அறக்கட்டளையின் உறுப்பினர் அரசு பணியில் சேர்ந்தால் அறக்கட்ளையின் உறுப்பினராக தொடர்ந்து இருக்கலாம் என விவரம் கண்டுள்ளதா என்றால் இல்லை. 3ம் வாதி உடல்நிலைய பாதிக்கப்பட்டு சில வருடங்கள் ஓய்வில் இருந்தார் என்றால் நான் அறக்கட்டளையின் பள்ளியில் செயலாளராக இருந்த வரை அவ்வாறு இல்லை. அதிகமான கல்வி கட்டணம் வாங்குவதாக சொல்வது குறித்து என்னை தவிர மற்ற அறக்கட்டளை உறுப்பினர்கள் அரசுக்கோ, காவல்துறைக்கோ புகார் செய்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. 2012 முதல் தற்போது வரை சாம்பவிகா பள்ளியானது முறையாக நல்லமுறையில் நடைபெற்று வருகிறது என்றால் சரியல்ல. நீதியரசர் ரவிராஜபாண்டியன் ஆணைய அறிக்கைக்கு பிறகு தமிழக அரசாங்கமானது சாம்பவிகா கல்வி நிலையமானது கூடுதல் கல்வி கட்டணம் வசூல் செய்வதாக நடவடிக்கை எதுவும் இதுவரை எடுத்தது இல்லை என்றால் நான் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. 2012 ம் வருடத்தில் இருந்து தற்போது வரை மேற்படி பள்ளிக்கூடத்தின் மாணவர்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ கூடுதலாக கல்வி கட்டணம் வசூலிப்பது குறித்து சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளார்களா என்றால் மாணவர்களின் படிப்பு பாதிக்க கூடும் என்பதற்காக நடவடிக்கை எடுதிடவில்லை. 2012 ம் வருடத்தில் இருந்து தற்போது வரை சாம்பவிகா

கல்வி நிலையத்தில் மாணவர்களிடம் கூடுதலாக கல்வி கட்டணம் வசூலிக்கவில்லை என்றும் கல்வி கட்டணம் வசூலித்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடிதமானது 5ம் பிரதிவாதி ராணிக்கு அனுப்பியது என்றால் சரிதான். மேற்படி கடிதத்தில் 22.05.2015 அன்று மாலை 4.00 மணியளவில் சாம்பவிகா மேல்நிலையப்பள்ளியில் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுவதாக சங்கதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 4, 5 பிரதிவாதிகள் எங்களுக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பி.வா.சா.2க்கு நாங்கள் வழக்கறிஞர் மூலமாக அனுப்பிய பதில் என்றல் சரிதான். பாரதிதாசன் என்பவர் எனது மற்றோரு மகன் என்றால் சரிதான். அவர் B.E படித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பாரதிதாசன் சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் ஒரு உறுப்பினராக இருந்தவர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 18.04.2015 ம் தேதிய கடிதமானது மேற்படி பாரதிதாசன் தான் வெளிநாடு செல்வதால் அறக்கட்டளை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதாக சொல்லி அனுப்பிய கடிதம் ஆகும் என்றால் சரிதான். நான் கதவு எண். 23 பரணி தெரு, செந்தமிழ் நகர், சிவகங்கை என் முகவரியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மலர்வேணி, பாலமுருகன் ஆகியோர் 2012 முதல் தற்போது வரை சாம்பவிகா கல்வி அறக்கட்டளைக்கு சென்று வந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. ஒரு அறக்கட்டடை உறுப்பினர் எத்தனை கூட்டங்களுக்கு வரவில்லை என்றால் அறக்கட்டளை உறுப்பினார் பதவியில் இருந்து நீக்கலாம் என்றால் தொடர்ந்து 3 கூட்டங்ளுக்கு வரவில்லை என்றால் நீக்கலாம். அறக்கட்டளை உறுப்பினராக உள்ள ஒருவரை என்ன காரணங்களுக்காக நீக்க முடியும் என்றால் பணம் மோசடி, கூட்டத்திற்கு வராமல் இருத்தல் போன்ற பைலாவில் உள்ள காரணங்களுக்காக நீக்கலாம். 2 மாதத்திற்கு ஒரு முறை அறக்கட்டளையின் கூட்டத்தை கூட்டாமல் இருக்கும் பட்சத்தில் அதற்கு அடுத்து என்ன நடவடிக்கை உள்ளது என்றால் புதிய

அறக்கட்டளை தேர்ந்தெடுக்கவும், வராதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அறக்கட்டளையில் உள்ள உறுப்பினர்கள் என்ன பொருப்பில் உள்ளார்களோ அந்த பொருப்பில் இருந்து நீக்கப்படுவார்கள். அறக்கட்டளையின் உறுப்பினர்கள் நீக்கப்படும் போது புதிய உறுப்பினர்களை சேர்க்கலாமா என்றால் பைலாவில் சேர்க்கலாம் என சொல்லப்பட்டுள்ளதால் சேர்க்கலாம். உறுப்பினரை நீக்கம் செய்யமுடியாது சஸ்பெண்ட செய்ய முடியும். அறக்கட்டளையில் இருந்து முத்துகண்ணன், கணேசன், சரவணன் ஆகியோர் விலகிய பின்பு 4, 5 பிரதிவாதிகள் மற்றும் எனது மற்றோரு மகனான பாரதிதாசன் அறக்கட்டளையின் உறுப்பினராக சேர்க்கப்பட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி புதிதாக 3 பேர் அறக்கட்டளையில் சேர்க்கப்பட்டதற்கு முதலில் ஏற்படுத்தப்பட்ட டிரஸ்ட் பத்திரத்தை ரத்து செய்திடாமல் புதிதாக திருத்தம் செய்த டிரஸ்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். புதிதாக சேர்க்கக்கூடிய உறுப்பினர்களை பொருத்து எத்தனை உறுப்பினர்கள் சேர்ந்து தீர்மானம் இயற்ற வேண்டும் என்றால் புதிய உறுப்பினர்களை சேர்ப்பதற்கு அறக்கட்டளையில் இருந்து விலகிய உறுப்பினர்களை தவிர மீதம் உள்ள உறுப்பினர்கள் சேர்ந்து தீர்மானம் போட வேண்டும். அறக்கட்டளையில் இருந்து விலகி சென்றவர்கள், அறக்கட்டளையில் அதன் பிறகு போடப்படும் தீர்மானம் குறித்து ஆட்சேபனை செய்ய இயலாது என்றால் சரிதான். மேற்படி ஆட்சேபனை செய்ய இயலாத விலகி சென்ற உறுப்பினர்கள் மேற்படி அறக்கட்டளையின் தீர்மானம் குறித்து சட்ட நடவடிக்கை எவ்வளவு நாட்களுக்குள் எடுக்க முடியும் என்றால் விலகி சென்ற உறுப்பினர்களால் சட்ட நடிவடிக்கை எடுக்க இயலாது அது போன்று பைலாவிலும் உள்ளது. அறக்கட்டளையில் இருந்து விலகி சென்ற உறுப்பினர்களை தவிர அறக்கட்டளையில் உள்ள மீதம் உள்ள உறுப்பினர்கள் அறக்கட்டளையை தொடர்ந்து நடத்தலாம் என்றால் சரிதான். சாம்பவிகா அறக்கட்டளை பொது அறக்கட்ளையா அல்லது பிரைவேட் அறக்கட்டளையா என்றால்

பிரைவேட் அறக்கட்டளை ஆகும். 2 மாதங்களுக்கு ஒரு முறை அறக்கட்டளையின் கூட்டம் 2012க்கு பிறகு எத்தனை முறை நடைபெற்றது என்றால் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை. 2012க்கு பிறகு தற்போது வரை மேற்படி அறக்கட்டளை கூட்டமானது 2 மாதத்திற்கு ஒரு முறை நடைபெறாதது குறித்து தாவா வழக்கை தவிர வேறு என்ன நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் CEO , DEO அலுவலகம் , காவல் துறை மற்றும் அரசுக்கு புகார் அனுப்பியுள்ளேன். மேற்படி புகார் ஆவணங்கள் எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் சார்பாக நடைபெறும் பள்ளிக்கூடத்தில் அரசு விதிகளுக்கு மீறி கூடுதலாக கல்வி கட்டணம் எதுவும் 4, 5 பிரதிவாதிகளால் 2012 வருடத்திற்கு பிறகு வசூலிக்கப்படவில்லை என்றும் கூடுதல் வசூலித்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு செயலுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 2012ம் வருடத்திற்கு பிறகு 4, 5 பிரதிவாதிகளால் 2 மாதத்திற்கு ஒரு முறை அறக்கட்டளையின் கூட்டம் கூட்டப்பட்டு தற்போது நடைபெறுகிறது என்றும் நானோ, 2, 3 வாதிகளோ மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருந்து தற்போது பொய் விவரங்களை சொல்லி வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 4, 5 பிரதிவாதிகள் தற்போது வரை சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் கணக்கு வழக்குககளை பராமரித்து வருகிறார்கள் என்றும் அதனால் மேற்படி அறக்கட்டளையின் கணக்கு வழக்குகளை தாக்கல் செய்ய கோரிடும் எனது பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எனது வழக்கை நிரூபிக்க போதுமானவை அல்ல என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.09.23 18:06:54 +0530